**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நான்குநேரி**

முன்னிலை: திரு. R. பூமிநாதன், பி.எஸ்.சி, பி.எல்.,
நீதித்துறை நடுவர், நான்குநேரி

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17 ஆம் நாள் புதன்கிழமை

குற்றவியல் பலவகை மனு எண் 501/2026

CNR No.TNTL20-002295-2026

சிவகுருநாதன், வயது 51/2026,
த/பெ. திருமலை

... மனுதாரர்/எதிரி

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
ஏர்வாடி காவல்நிலையம்,
திருநெல்வேலி மாவட்டம்.
குற்ற எண் 268/2026 ... எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர்

மனுதாரர்/எதிரிக்கு பிணை வழங்க கோரி பிரிவு 480 BNSS கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிணைமனுவானது இன்று என் முன்பாக விசாரணைக்கு வரப்பெற்று, மனுதாரர் தரப்பில் திரு. கார்பஸ்தேவ், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகி எடுத்துரைத்த இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று 17.06.2026 ஆம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

1. பிணைமனு மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்/எதிரி மீது பிரிவுகள் 296(b), 75(1)(i) BNS மற்றும் 4 of TNPHW Act-ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அரசு தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு பதில் பெறப்பட்டது.

2. எதிரியை பிணையில் விட்டால் வழக்கின் சாட்சிகளை கலைக்க நேரிடும் என்பதாலும், எதிரியை ஜாமீனில் விடுவித்தால் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாகிவிடுவார் என்றும், எதிரி பெண்களுக்கு

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN
Date: 2026.06.17 16:39:32 +0530

குந்தகம் விளைவிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டுள்ளதாலும், மேலும் வழக்கின் புலன்விசாரணையானது ஆரம்பக்கட்ட நிலையில் இருந்துவருகிறது என்று கூறி எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. பிணைமனு மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. வழக்காவணங்களை பரீசிலனை செய்கையில் புகார்தாரர் கடந்த 09.06.2026 ம் தேதி இரவு 07.30 மணிக்கு ஈரோடு டூ மார்த்தாண்டம் செல்லும் TN 01 AN 3466 என்ற பதிவெண்கொண்ட SETC பேருந்தில் சென்றுகொண்டிருந்தபோது, 10.06.2026 ம் தேதி காலை 04.30 மணியளவில் மேற்படி பேருந்தானது நான்குநேரி டூ வள்ளியூர் தேசிய நெடுஞ்சாலையில் விஸ்வா கபே அருகே சென்றுகொண்டிருந்ததாகவும், அப்போது வாதியின் பின் சீட்டில் அமர்ந்திருந்த எதிரி சிவகுருநாதன் பின்சீட்டிலிருந்து ஜன்னல் ஓர சைடு வழியாக கையை விட்டு வாதியின் வயிற்றில் கையை வைத்து தவறான முறையில் தொட்டதாகவும், உடனே வாதி ஏன் இப்படி செய்றீங்க உங்களுக்கு அசிங்கமாக இல்லை என கேட்டதற்கு, எதிரி வாதியை பார்த்து நீ எப்படிப்பட்ட ஆளுன்னு எனக்கு தெரியும் என அசிங்கமாக வார்த்தைகளால் பேசியது சம்பந்தமாக மனுதாரர்/எதிரி மீது பிரிவுகள் 296(b), 75(1)(i) BNS மற்றும் 4 of TNPHW Act–ன் கீழ் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர்/எதிரி கடந்த 10.06.2026–ம் தேதி முதல் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு 08 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருவது தெரியவருகிறது. வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவற்றை கருத்தில்கொண்டும், குற்றமானது தீவிர தன்மை உடையதாலும், எதிரி மீண்டும் இதுபோன்ற குற்ற செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், வழக்கின் புலன்விசாரணையானது ஆரம்பக்கட்ட நிலையில் இருந்துவருவதாலும், மேற்படி எதிரியை பிணையில் விடுவித்தால்

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN
Date: 2026.06.17 16:39:40 +0530

தலைமறைவாக வாய்ப்புள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இப்பிணை மனுவானது தள்ளுபடி செய்ய உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 17.06.2026 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.06.17 16:39:44 +0530

நீதித்துறை நடுவர்,
நான்குநேரி.